செ.வெ.எண்: 12/2021 நாள்: 24.04.2021

**பத்திரிக்கைசெய்தி**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (24.04.2021) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் கொரோனா வைரஸ் தடுப்பது குறித்து மேற்கொண்டுள்ள பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பான அரசு அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது..

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-**

கொரோனா வைரஸ் 2-ம் அலை பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு, மாநில அரசு பல்வேறு கட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கண்காணிப்பு குழு அமைப்பதற்கு உத்தரவிட்டதற்கினங்க நமது மாவட்டத்தில் மாவட்ட அளவில் சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் உள்ளாட்சித்துறை ஆகிய துறை அலுவலர்களைக்கொண்டு 10 சிறப்பு கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் தங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட குறுவட்டங்களில் பொது சுகாதாரம், காவல்துறை மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சித்துறை அலுவலர்களுடன் இணைந்து கொரோனா நோய்த்தொற்று தடுப்பு மற்றும் துாய்மை பணிகள் தொடர்பான பணிகளை கண்காணித்து அதுதொடர்பான விபரங்களை உடனுக்குடன் சம்பந்தப்பட்டகோட்டாட்சியர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் தினசரி அறிக்கை சமர்பிக்க வேண்டும்.

குறுவட்ட அளவில் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறுவட்டத்தில் உள்ள பொதுக் கட்டடங்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கான இடங்களை கண்டறிந்து பிற துறை அலுவலர்களுடன் இணைந்து மேற்கண்ட இடங்களை தினந்தோறும் கிருமிநாசினி மூலம் துாய்மைபடுத்தும் பணியை தொடர்ந்து கண்காணித்து அவ்வப்போது ஆய்வுமேற்கொள்ள வேண்டும்.

கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறு வட்டத்தில் உள்ள திருமணமண்டபங்களில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் தவிர புதிய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறதா என்பதை கண்காணித்தும், மேற்படி நிகழ்சிகளில் குறிப்பிட்ட அளவில் பொதுமக்கள் கலந்து கொள்கிறார்களா என்பதை உறுதிசெய்தும், மேற்கண்ட நிகழ்வுகளில் கொரோனா வைரஸ் நோய் ஏற்படும் விதம் குறித்தும் அதிலிருந்து விடுபட செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வினைஏற்படுத்திட வேண்டும்.

மேலும், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறுவட்டத்தில் உள்ள கிராமங்களில் பொதுமக்களுக்கு குளோரின் கலந்த குடிநீர் விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்தும், கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறுவட்டத்தில் உள்ள பொதுத்தெருக்கள், கழிவு நீர் சாக்கடைகள் மற்றும் பொதுக்கழிப்பறைகள் ஆகிய இடங்களில் தினந்தோறும் கிருமிநாசினி மூலம் துாய்மைபடுத்தும் பணியை உறுதிப்படுத்திடவும், உள்ளாட்சித்துறை மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்களுடன் இணைந்து கண்காணித்திட வேண்டும்.

பொது இடங்களில் முகக்கவசம் அணியாமல் நடமாடுபவர்கள், சமூக இடைவெளி பின்பற்றாதவர்கள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகளில் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு அவரவர் வீடுகளில் தனிமைபடுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருந்தும் அதனையும் மீறி வெளியில் நடமாடுபவர்களுக்கு அபராதம் விதித்து அறிவுரை வழங்வேண்டும்.

மேலும், கண்காணிப்பு அலுவலர்கள் தங்களது எல்கைக்கு உட்பட்ட பகுதிகளுக்குட்பட்ட கிராமங்களின் கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், சம்பந்தப்பட்ட வருவாய்

ஆய்வாளர்கள், சுகாதாரத்துறை கள அலுவலர்கள், சம்பந்தப்பட்ட காவல்நிலைய துணை காவல் ஆய்வாளர் நிலைக்கு குறையாத ஒரு அலுவலர் ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி மேற்படி பகுதிகளில் பிறமாநிலத்திலிருந்து தற்போது சொந்த ஊர் திரும்பியவர்கள், வெளிநாடுகளில் வேலைக்கு சென்று திரும்பியவர்கள், தொடர்பான விபரங்களை சேகரித்து சுகாதாரத் துறையினர் மூலம் உடனடியாக அவர்களின் உடல் நிலை தொடர்பான விபரங்களை ஆய்வு செய்திடவும் தொடர்ந்து கண்காணித்திடவும் வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் கொரோனா வைரஸ் பரவலை கண்காணிக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலர் திரு.சுகுணாசிங் இ.கா.ப.,அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ஜனனிசௌந்தர்யா, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திரு.சரவணன், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.நெடுமாறன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**